# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8097198

1. District மாவட்டம்: Madurai PS: காவல்நிலையம்: V&AC, Year: ஆண்டு: 2019 FIR No.: மு.த.அ. எண்: 2 Date: நாள்: 23.01.19

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102 Crpc
(ii) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 21.01.19
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 19.25 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.01.19 Time நேரம் : 23.45 hrs.
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.01.19 Time நேரம் : 19.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 45 Km's West
Beat Number முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the Sub Registrar Tirumang Madurai District
(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Tirumalai (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ramakrish
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Tashildhar (g) Address : முகவரி Deputy Inspection Cell office, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. K. Kasthuri w/o Tangapandian, Assistant, Sub-Regis (incharge) Office of the Sub-Registrar, Tirumangalam, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
This case was registered after getting the instructi from the Superior officer's and the legal Advisor V&A Chennai and hence no delay.

GCP 240 34(Type 2) 90 000 Cps 21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Two Separate Sheets in Page no's 3 to 6 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V. Hemalatha Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Send by post

[signature] 23.1.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.01.2019 at 20.30hrs.

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை ............ No. எண்
Inspector of Police,
V&AC, Madurai.

கடந்த 21.01.2019-ம் தேதி நான் (த.சூரியகலா) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது திரு.ஆர்.திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை அவர்கள் ந.க.எண்.ஐ1/1006/2019 நாள்.21.01.2019ம் தேதியின் கீழ் அளித்த புகார் மனுவை மதுரை ஊ.த.க.பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு என்னிடம் கொடுத்த மேற்படி புகார் மனுவையும் பணம் ரூ.23,200/- மற்றும் திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களையும் பெற்று பார்வையிட்டது. புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு:

அனுப்புநர்: திரு.ஆர்.திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிப்பு பிரிவு மதுரை. ந.க.எண்.ஐ1/1006/2019 நாள்.21.01.2019ம் அய்யா, பொருள்: திடீர் அணை ஆய்வு - 21.01.2019ம் தேதியன்று மதுரை மாவட்டம், திருமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வில் கணக்கில் வராத தொகை ரூ.23,200/- கைப்பற்றப்பட்டது. திருமதி. கஸ்தூரி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), திருமங்கலம் என்பவர் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுதல் - தொடர்பாக பார்வை: திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள்.21.01.2019.

21.01.2019-ம் தேதியன்று நேற்றைய தினம் கிடைத்த ரககிய தகவலின் படி மதுரை மாவட்டம் திருமங்கலம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றும் திருமதி. கஸ்தூரி என்பவர் சார்-பதிவாளர் பொறுப்பில் பணியாற்றுவதாகவும், அங்கு பதிவு செய்யப்படும் பத்திரங்களுக்கு பத்திரப்பதிவு எழுத்தர்கள் மூலம், சம்மந்தப்பட்ட பொதுமக்களிடம் லஞ்சத் தொகை பெறுவதாகவும், அலுவலக நேரம் முடிந்த பின்னர் அன்றைய பதிவுகளுக்குரிய லஞ்சத் தொகையை அந்தந்த பத்திர எழுத்தர்களிடம் மொத்தமாகப் பெற்றுச் செல்வதாகவும் கிடைத்த தகவலின் பேரில் நேற்று 21.01.2019-ம் தேதி இரவு சுமார் 19.25 மணியளவில் திருமங்கலம் சார்-பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் நுழைந்து அங்கு பணியிலிருந்த சார்-பதிவாளர் (பொ) திருமதி.கஸ்தூரி அவர்களிடம் அறிமுகம் செய்த பின்னர் அந்த அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது அங்கு கணிணி அறையில் அமர்ந்து அலுவல் கவனித்துக் கொண்டிருந்த திருமதி. கஸ்தூரி அவர்கள் திருமங்கலம் சார்-பதிவாளர் திரு. மகேந்திரன் அவர்கள் விடுப்பில் சென்று விட்ட காரணத்தால், தானே சார்-பதிவாளர் பொறுப்பிலிருந்து அலுவல் கவனித்து வருவதாகவும், திருமதி. கஸ்தூரி தெரிவித்தார். தொடர்ந்து, அவரிடம் இன்று பதிவான பத்திரங்கள் தொடர்பாக வசூலான அரசுக்கட்டணம், ரொக்கமாக எவ்வளவு உள்ளது என்று திருமதி. கஸ்தூரியிடம் கேட்ட போது, அவர் பதிவுகளை கணக்கிட்டு ரூ.19,213/- வசூலானதாக தெரிவித்து பணப்பெட்டியில் இருந்த தொகையை ஆஜர் செய்தார். அது சரியாக இருந்தது. அதைத்தொடர்ந்து அலுவலகத்தில் உள்ள பணியாளர் பண இருப்பு பதிவேட்டை கேட்டதின் பேரில், அவர் அதனை ஆஜர் செய்தார். அதில் உதவியாளர்கள் கா. கஸ்தூரி - ரூ.440/-, சி.லெட்சுமி - ரூ.80/-, ரா.காமராஜ் - ரூ.200/-, இ.நி.உ. ஜெ.பாலசுப்பிரமணியன் - ரூ.200/-, அ.உ. பா. ராஜேந்திரன் - ரூ.50/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், சார்பதிவாளர் இருக்கை மேடையின் எதிரில் உள்ள மேஜையில் பத்திரம் பதிபவர்களுக்கு ரேகை எடுக்கும் பயோ

கேமராவுடன் கூடிய கணிப்பொறி உள்ளது. அந்த இருக்கையில் திரு. பாலசுப்பிரமணியன் என்ற இளநிலை உதவியாளர் சார்பதிவாளர் இருக்கையை நோக்கி பணியில் இருந்தார். அவரையும் அவாது இருக்கையையும் சோதனையிட்டதில் திரு.பாலசுப்பிரமணியன் மேல்சட்டைப்பாக்கெட்டில் ரூ.200/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது, தனது சொந்தப்பணம் என்று கூறினார். எனவே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து சோதனை மேற்கொண்ட போது, பயோ கேமரா ஆப்பரேட்டர் திரு. பாலசுப்பிரமணியனின் இருக்கைக்கு வலது புறம் இரண்டு மேஜைகள் இருந்தது. அவற்றுள் கதவை ஒட்டிய மேஜையில் அலுவலக உதவியாளர் திரு. இராஜேந்திரன் பணியில் இருந்தார். அவரையும் அவரது இருக்கையையும் சோதனையிட்டதில் திரு.ராஜேந்திரனின் மேல்சட்டைப்பாக்கெட்டில் ரூ.50/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது, தனது சொந்தப்பணம் என்று கூறினார். எனவே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து சோதனை மேற்கொண்ட போது, அருகில் இருந்த மேஜையில் பத்திரம் பதிபவர்களை புகைப்படம் எடுக்கும் கேமராவுடன் கூடிய கணிப்பொறி உள்ளது. அதில் திரு. செந்தில்குமார் என்ற கேமரா ஆபரேட்டர் பணியில் இருந்தார். அவரையும், அவரது இருக்கையையும் சோதனையிட்டதில் திரு.செந்தில்குமாரிடம் பேண்ட்பாக்கெட்டில் ரூ.40/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது, தனது சொந்தப்பணம் என்று கூறினார். எனவே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவரது இருக்கையின் வலதுபுறம் மேஜைக்கு கீழே ஒரு பேப்பரில் சுற்றப்பட்டு கிடந்த கத்தையை எடுத்து சோதனையிட்டதில் அதில் ரூ.11,360/- பணம் இருந்தது. அந்த பேப்பரில் பத்திர எழுத்தர்கள் எத்தனை பத்திரங்கள் பதிவு செய்தார்கள் என்றும் அவர்களுள் சிலரது பெயருக்கு நேரே தொகையும் குறிப்பிட்டு சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது. அந்த பணம் மற்றும் பேப்பரில் உள்ள குறிப்பு குறித்து விசாரித்த போது, அந்த பணம் எப்படி வந்தது என கேட்ட போது, தனக்கு தெரியாது என்று திரு.செந்தில்குமார் கூறினார். எனவே மேற்படி கணக்கில் வராத தொகை ரூ.11,360/- கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து சோதனையிட்டதில், கேமரா ஆப்பரேட்டர் இருக்கைக்கு வலது புறம் கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய கணிப்பொறி அறை உள்ளது. அந்த கணிப்பொறி அறையின் உள்ளே நுழைந்தவுடன் இடது பக்கம் உதவியாளர் திருமதி. S. லெட்சுமி என்பவரும், அவருக்கு அடுத்தாற் போல் பொறுப்பு சார்பதிவாளரும் உதவியாளருமான திருமதி. கஸ்தூரியும், அவருக்கு அடுத்தாற் போல் TCS Staff திருமதி. C. லெட்சுமி ஆகியோர் பணியில் இருந்தனர். அவர்களையும் அவர்களது இருக்கை மற்றும் உடைமைகளையும் காவல் ஆய்வாளர் திருமதி. சூரியகலா, சோதனையிட்டதில் திருமதி.கஸ்தூரியின் கைப்பையில் ரூ.400/-ம், திருமதி. சி. லெட்சுமியின் மணிபர்ஸில் ரூ.400/-ம், திருமதி. S.லெட்சுமியின் மணிபர்ஸில் ரூ.80/-ம் இருந்தன. அந்த பணம் குறித்து கேட்ட போது, அவர்களது சொந்த பணம் என்று கூறியதால் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார்பதிவாளர் இருக்கைக்கு பின்புறம் உள்ள வாசலைத்தாண்டி கிழக்கு மேற்காக மற்றொரு நீண்ட ஹால் உள்ளது. அந்த ஹாலின் மேற்கு பகுதியில் உள்ள இருக்கையில் உதவியாளர் திரு. காமராஜ் களப்பணி கோப்புகளை சரிபார்க்கும் அலுவலில் இருந்தார். அவரையும், அவரது இருக்கையையும் சோதனையிட்டதில் திரு.காமராஜ் சட்டைப்பையில் ரூ.200/- பணம் இருந்தது. அது அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹாலின் கிழக்கு பகுதியில் ஆவணங்களை ஸ்கேன் செய்யும் அறை உள்ளது. அந்த அறையில் Nine Star Company ஊழியர்களான திரு.விஜயபாஸ்கர் மற்றும் திரு. நாகராஜன்

ஆகியோர் பணியில் இருந்தனர். அவர்களையும், அவர்களது இருக்கையும் சோதனையிட்டதில், திரு. விஜயபாஸ்கரின் சட்டைப்பையில் ரூ.10/-ம், திரு. நாகராஜனின் சட்டைப்பையில் ரூ.12/- மட்டும் இருந்தது. ஹாலின் தெற்கு புறத்தில் கழிப்பறைக்கு செல்லும் வழி உள்ளது. தொடர்ந்து காம்பவுண்டு சுவர் வரை காலியிடம் உள்ளது. அந்த காலியிட கிழக்கு பகுதியில் இரண்டு கழிப்பறைகள் உள்ளது. காலியிட மேற்கு பகுதியில் வெளியே செல்லும் சிறிய வாசல் உள்ளது. அந்த வாசல் மூடியிருந்தது. சார்பதிவாளரின் இருக்கையின் மேலே ஒரு சிசிடிவி கண்காணிப்பு கேமரா உள்ளது. அது செயல்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ளது. சார்பதிவாளர் இருக்கை உள்ள ஹாலுக்கு கிழக்கே பதிவேடுகள் வைப்பறை இரண்டு உள்ளது. முதலில் உள்ள அறையில் சுமார் 10 அடி உயரமுள்ள தூசிகள் படிந்த பழைய கோப்புகளுடன் கூடிய ஸ்டீல் ரேக்குகள் உள்ளது. அந்த ரேக்குகளுக்கு அருகே இருந்த பிளாஸ்டிக் டிரேயில் பேப்பர்களுக்கு அடியில் ரூ.3,180/- செருகி வைக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த அறைக்கு அடுத்த ஹாலில் உள்ள சிமெண்ட் செல்ப்புகளின் எதிரே தென்கிழக்கே இருந்த 5 ½ அடி உயரமுள்ள இரும்பு பீரோவை சோதனையிட்டதில், மேலிருந்து முதல் தட்டில் கோப்புகளுக்கு அடியில் ரூ.3,900/-ம், இரண்டாம் தட்டில் உள்ள கோப்புகளுக்கு இடையில் ரூ.4,760/-ம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி தொகை குறித்து அனைத்து அலுவலர்களிடமும் விசாரித்த போது, அவை குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என கூறியதின் பேரில் மேற்படி கணக்கில் வராத பணம் ரூ.11,840/- கைப்பற்றப்பட்டது.

மேலும், இன்று பதிவான ஆவணங்கள் குறித்த கணிணிப்பதிவை பிரின்ட் அவுட் எடுத்து பார்வையிட்டதில், இன்று 21.01.2019-ம் தேதி ஆவண எண்.223/2019 முதல் 274/2019 வரை மொத்தம் 52 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தது. திடீர் இணை ஆய்வின் போது, கணக்கில் வராத பணம் மொத்தம் ரூ.23,200/- (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) கைப்பற்றப்பட்டது. மேலும், தொடர் விசாரணைக்காக கீழ்கண்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

| | |
|---|---|
| (1) | திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பண இருப்பு பதிவேடு |
| (2) | திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேட்டின் ஜனவரி 2019-ன் உண்மை நகல் |
| (3) | ரூ.11,360/- பணம் சுற்றி வைக்கப்பட்டிருந்த குறிப்புகள் எழுதப்பட்ட தாள். |
| (4) | திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட் 21.01.2019-ம் தேதி பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களுக்கான A -Account ன் நகல் |

மேற்படி திடீர் இணை ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட திடீர் ஆய்வு குறிப்புரை, நாள் 21.01.2019, கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.23,200/- (ரூபாய் இருபத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) மற்றும் மேற்குறிப்பிட்ட ஆவணங்களையும் இத்துடன் இணைத்து மேற்படி கணக்கில் வராத பணம் சார்பதிவாளர் அலுவகத்தில் காணப்பட்டதால் மேற்படி திருமதி.கா. காஸ்தூரி, உதவியாளர், சார்பதிவாளர் (பொ), திருமங்கலம் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக

ஒப்படைக்கிறேன். ஒப்பம் (R.திருமலை) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை.(21.01.2019) இணைப்பு:1.திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள்.21.01.2019. 2.பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள். 3.கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். 4.ரொக்கத் தொகை ரூ.23,200/-.sir received. (sd) M.Sathyaseelan 21.01.XIX D.S.P, V&AC, Madurai. 21.01. XIX / 23.30 hrs. Inspector Tmt.T.Suriyakala to register a case on the above Complaint and also to hand over the case files to Tmt.V.Hemalatha for conducting further investigation(sd) M.Sathyaseelan D.S.P, V&AC, Madurai. 21.01. XIX.

Sir, received the petition on 21.01.2019 at 23 45 hrs and after getting concurrence from the Superior Officers, registered a case in Madurai V&AC, Crime No.02/2019 U/s 102 Cr.Pc and 7 of Prevention of Corruption Act,1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 (sd) Tmt.T.Suriyakala Inspector of Police, V&AC, Madurai on 23.01.2019 at 19 00 hrs.

The Original FIR along with the report of the District Inspection Cell Officer dated 21.01.2019 and Joint Surprise Check Proceedings dated 21.01.2019 are submitted to the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act cases, Madurai and copies were sent to the Officers concerned.

(T. Suriyakala)
Insp. of Police
V&AC, Madurai 23.1.19